2026

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2014

## வரலாறு I

| தரம்:- 11 | சுட்டெண்:- | நேரம்:- 1 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

1. "நிகழ்காலமும் எதிர்காலமும் நிச்சயமாக இறந்தகாலத்தில் இருந்து கட்டியெழுப்பப்படுவதுடன் அதன் அடையாளங்களையும் ஆங்காங்கே காண முடியும்...." என வரலாற்றிற்கு வரைவிலக்கணம் கூறியவர்.
   1. ஈ.எச்.கார்  2. ஜவஹர்லால் நேரு
   3. ஜீ.எம். திரவியன்  4. பிகொட்

2. வசப மன்னனின் ஆட்சி அதிகாரம் இலங்கையின் வடபகுதியிலும் பரவலடைந்து இருந்தமையை அறிந்து கொள்ள உதவும் வரலாற்று ஆவணம்
   1. வல்லிபுர பொற்சாசனம்  2. ஆலம்புரி சாசனம்
   3. கல் பொத்த சாசனம்  4. ஹ பெஸ்ஸசாசனம்

3. செலியுகஸ் நிகேடருடன் போரிட்டு சிந்து நதியின் மேற்குப் பகுதியில் இருந்த வடமேற்கு இந்தியாவைப் பெற்றுக் கொண்ட மௌரியப் பேரரசின் ஆட்சியாளர்
   1. பிந்துசாரன்  2. அசோகன்  3. சமுத்திரகுப்தன்  4. சந்திரகுப்த மௌரியன்

4. இலங்கையில் பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வந்த திரிபிடகம் நூல் வடிவம் பெறக் காரணமான மன்னன்
   1. மகாசேனன்  2. தாதுசேனன்  3. வலகம்பா  4. வசபன்

5. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனுடைய எலும்புத்துண்டுகள் கண்டு எடுக்கப்பட்ட குகைகள்
   1. நிலகல, பெலிகல்கே  2. பாகியன்கல, தோணிக்கல
   3. புலத்சிங்கள, பலாவி  4. மாந்தை, பலாங்கொடை

6. "துலாபாரக்" கொடைகளை வழங்கிய பொலனறுவைக் கால மன்னன்
   1. தாதுசேனன்  2. நிஸ்ஸங்கமல்ல  3. 1ம் விஜயபாகு  4. வலகம்பா

7. மீ ஓயாவின் மூலம் நீரைப் பெற்றுக் கொண்ட குளம்
   1. மாகல்ல வாவி  2. அபயவாவி  3. தப்போ வாவி  4. கலாவாவி

8. புராதன இலங்கையின் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தின் உயர்தரமான நிர்மாணமாகக் காணப்படுவது
   1. போட்டா அணை  2. கலிங்கல் தொட்டி  3. சுருங்கை  4. அலைதாங்கி

9. பெலிகலையில் இருந்து தந்ததாதுவை தம்ப தெனியாவில் பிரதிஷ்டை செய்து உன்னதமான தலதா வழிபாட்டை மேற்கொண்ட மன்னர்
   1. 1ம் புவனேகபாகு  2. 1ம் விஜயபாகு  3. 4ம் விஜயபாகு  4. 2ம் பராக்கிரமபாகு

10. முழு இலங்கையையும் ஐக்கியப்படுத்தி ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த இறுதி மன்னன்
    1. 4ம் மகிந்தன்  2. 6ம் பராக்கிரமபாகு  3. 1ம் விஜயபாகு  4. 1ம் பராக்கிரமபாகு

11. நிரல் I இல் தரப்பட்டுள்ள மன்னர்களுடன் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகள் நிரல் II இல் தரப்பட்டுள்ளது. இதனைத் தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. 2ம் பராக்கிரமபாகு | A. தந்ததாது கொண்டுவரப்பட்டமை |
| 2. மூத்த சிவன் | B. திரிபீடக்த்தை எழுதுவித்தமை |
| 3. துட்டகைமுனு | C. கலிங்க மாகனை விரட்டியமை |
| 4. வலகம்பா | D. மகாமேக நந்தவனத்தை அமைத்தமை |
| | E. ருவன் வெலிசாயாவை அமைத்தமை |

   1. CDEB  2. CABC  3. ABDC  4. BCAD



kalvi.lk

12. A "சிங்கள சங்கய" என்ற சிறு சிங்கள புரட்சி ஏற்பட்டமை

B- விஜய நகரம் பேரரசின் துறைமுகம் ஒன்றை ஆக்கிரமித்தமை

C- கண்டி அஸ்கிரிய பீடத்தை ஆரம்பித்தமை

D- யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக சப்புமல் குமாரனை நியமித்தமை

மேலே தரப்பட்ட நிகழ்வுகளில் 6ம் பராக்கிரமபாகுவுடன் தொடர்புடைய நிகழ்வுகளைக் கொண்ட விடை

1. AB 2. CD 3. BD 4. AC

13. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு காலமாகத் தென்னிந்தியாவில் முஸ்லிம்கள் ஆதிக்கம் பரவாமல் பாதுகாத்தவர்கள்

1. பல்லவர் 2. சேரர்
3. விஜயநகர ஆட்சியாளர் 4. பாண்டியர்

14. இந்தியாவின் இஸ்லாமிய ஆட்சியாளராக இருந்த போதிலும் ஏனைய சமயங்களையும் ஆதரித்து சமய சகிப்புத் தன்மையை கடைப்பிடித்த மன்னன்

1. அலாவுதீன் 2. துக்ளக் 3. அக்பர் 4. பாபர்

15. ஐரோப்பிய கிறிஸ்தவர்களும் துருக்கியர்களும் யுத்தத்தில் ஈடுபடக் காரணமான புனித நகரம்

1. ஜெருசலம் 2. மக்கா
3. கொன்ஸ்தான்திநேபிள் 4. பக்தாத்

16. மறுமலர்ச்சிக்காலத்தில் கண்டு பிடிப்புக்களைச் செய்தவர்களின் பெயர்கள் நிரல் x லும் அவர்களின் கண்டுபிடிப்புக்கள் நிரல் y யிலும் தரப்பட்டுள்ளன. x ல் உள்ளர்களையும் y இல் உள்ளவர்களையும் பொருத்தமாக்கும் போது வரும் சரியான விடைத் தொகுதி

| நிரல் x | நிரல் y |
|---|---|
| 1. கலிலியோ கலிலி | A. குருதிச்சுற்றோட்டம் |
| 2. ஐசாக் நியூட்டன் | B- தொலை நோக்கி |
| 3. ஜோஹன்னஸ் கூட்டன் பேர்க் | C- ஈர்ப்பு விசை |
| 4. வில்லியம் ஹார்வே | D. புவி கோளவடிவம் |
| | E. அச்சு இயந்திரம் |

1. BACD 2. BCEA 3. ABCD 4. ECAB

17. சென்.வின்ஸன்ட் முனையின் அருகில் வானியல் நிலையம் ஒன்றை நிறுவியதோடு அதனை நடத்துவதற்கு உதவிகள் புரிந்த போர்த்துக்கல் மன்னன்

1. ஸ்பெலா 2. பிரான்சிஸ் 3. ஜோன்ஹஸ் 4. ஹென்றி

18. இந்தியாவின் கோவாவைத் தமது கீழைத்தேய மத்திய நிலையமாகக் கொண்ட மேலைத்தேய நாட்டவர்

1. போர்த்துக்கேயர் 2. ஒல்லாந்தர் 3. பிரான்சியர் 4. பிரித்தானியர்

19. கி.பி 1766 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கண்டி மன்னன்

1. 2ம் இராஜ சிங்கன் 2. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
3. 1ம் விமலதர்ம சூரியன் 4. ஸ்ரீ விக்கிரராஜசிங்கன்

20. ஜோசப் மசினி தலைமை தாங்கிய காபனேரி இயக்கத்துடன் தொடர்புபட்ட வரலாற்று நிகழ்வு

1. பிரெஞ்சுப் புரட்சி 2. ஜேர்மனியை ஒன்றிணைத்தல்
3. இத்தாலியை ஒன்றிணைத்தல் 4. ரஷ்யப் புரட்சி

21. இலங்கையின் இறுதி ஒல்லாந்த ஆளுனர்

1. 2ம் ஒரேஞ் வில்லியம் 2. றொபேட் பிறவுண்றிக்
3. தோமஸ் மெயிற்லண். 4. பன் எங்கள் பெக்



kalvi.lk

22. நிரல் I இல் காணப்படும் ஆண்டுகளுடன் நிரல் II இல் உள்ள வரலாற்று நிகழ்வுகளைத் தொடர்பு படுத்தினால் வரும் சரியான விடைத் தொகுதி

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. கி.பி .1802 | A - கண்டி இராச்சியம் கைப்பற்றப்படல் |
| 2. கி.பி 1810 | B - முதலாவது சுதந்திரப் போராட்டம் |
| 3. கி.பி 1815 | C - யூரிசபை அறிமுகப் படுத்தப்படல் |
| 4. கி.பி. 1818 | D - இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்றம் ஆக்கப்படல் |
| | E - பிரட்ரிக் நோத்தின் மலையகப் படையெடுப்பு |

1. DABC 2. DCAB 3. ACBD 4. BDAC

23. இலங்கை குடியேற்ற நாடாக மாற்றப்பட யோசனையை முன்வைத்த ஆணைக்குழு
1. டொனமூர் ஆணைக்குழு 2. மியூரன் ஆணைக்குழு
3. கோல்புறுக் ஆணைக்குழு 4. சோல்பரி ஆணைக்குழு

24. டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கேற்ப இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம்
1. சர்வ ஜனவாக்குரிமையை வழங்கல்
2. பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை
3. சட்ட வாக்கக் கழகம் அமைக்கப்பட்டமை
4. ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டமை

25. இலங்கையில் நீர்பாசனத் திணைக்களத்தை ஆரம்பித்து நீர்ப்பாசன விருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரித்தானிய ஆளுநர்
1. ஆதர் கோடன் 2. ரொபின்சன் 3. வெஸ்ட்றிஜ் வே 4. ஹென்றிவோட்

26. இலங்கையின் வட பிரதேசத்தில் சிறப்பாகக் செயற்பட்டுக் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்ட மிசனரி இயக்கம்
1. பப்டிஸ்ட் மிசனரி 2. வெஸ்லியன் மெதடிஸ்ற் மிஷனர்
3. சேர்க் மிஷனரி 4. அமெரிக்கன் மிஷனரி

27. "இலட்சக் கணக்கானோர் புரட்சியில் ஈடுபடும் போது அது ஒரு புயலாகவோ, சூறாவளியாகவோ மாறலாம்" எனக் குறிப்பிட்டவர்
1. மா- ஓ- சேதுங் 2. சியங்- காய்- செக் 3. சங்- யாத்- சென் 4. சௌ- என்- லாய்

28. கி.பி 1873இல் பிஸ்மார்க்கினால் உருவாக்கப்பட்ட "மூன்று பேரரசுகளின் சங்கம்" என்ற அமைப்பில் இருந்து விலகிக் கொண்ட நாடு
1. ஜேர்மனி 2. ஆஸ்திரியா 3. பிரித்தானியா 4. ரஷ்யா

29. "ஜனநாயக ஆட்சியின் வழிகாட்டிகளாக நாமே இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட ஐக்கிய அமெரிக்காவின் தலைவர்
1. ஹரி எஸ்.ட்ருமன் 2. பிராங்ளின் டீ. ரூஸ்வெல்ட்
3. வின்சன் சேர்ச்சில் 4. ஜோர்ஜ் வாஷிங்கடன்

30. ஐக்கிய அமெரிக்க அரசுகள் முதலாம் யுத்தத்தில் ஈடுபட காரணமாக அமைந்த விடயம்
1. பேர்ள் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் போர்க் கப்பல்களை யப்பான் தாக்கியமை
2. அமெரிக்காவின் லுசித்தானியா என்ற கப்பலை ஜேர்மனியர்கள் அழித்தமை
3. ஜேர்மனி போலந்தை ஆக்கிரமித்தமை
4. ஐரோப்பிய வர்த்தகம் பாதிக்கப்படும் என ஐக்கிய அமெரிக்கா அச்சமடைந்தமை.



kalvi.lk

31. 2ம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் ஏற்படுத்த உருவாக்கப்பட்ட அமைப்பு

1. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 2. சர்வதேச சங்கம்
3. நேட்டோ அமையம் 4. பிராங் பாட்

32. கி.பி 1947 இல் மெக் ஆத்தரின் அரசியல் யாப்பின்படி உருவாக்கப்பட்ட பாராளுமன்றம்

1. டுமா 2. ஸ்டேட் ஜெனரல் 3. டயட் 4. பிராங்பாட்

33. "உணவு, நிலம், சமாதானம், என்ற தொனிப் பொருளுடன் தொடர்புடையதாக உலகில் நடைபெற்ற நிகழ்வு

1. அமெரிக்கப்புரட்சி 2. பிரான்சியப்புரட்சி 3. சீனப்புரட்சி 4. ரஷ்யப் புரட்சி

34. ஜேர்மியர்கள், தூய ஆரியர்களின் வழிவந்த ஓர் உன்னதமான இனத்தவர் என்ற கருத்தை கொண்ட ஜேர்மனிய அரசியற் கோட்பாடு

1. பயனுடையவாதம் 2. மானிடவாதம் 3. பாசிசவாதம் 4. நாசிசவாதம்

35. 2ஆம் உலக போரில் பங்கு கொண்ட நேசநாடுகளைக் மட்டும் கொண்ட சரியான விடைத் தொகுதி

1. பிரான்ஸ், ஜேர்மனி, ரூமேனியா
2. பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா
3. இத்தாலி, ரஷ்யா, ஹங்கேரி
4. ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா

36. ஐரோப்பாவில் புரட்டஸ்தாந்து இயக்கம் தோற்றம் பெற்றுச் சமயச் சீர்திருத்தம் ஏற்படக் காரணமானவர்

1. மாட்டின்லூதர் 2. பெஸ்டர் ஜோன் 3. பெரசல்சஸ் 4. மொன்ரன்கியு

37. ரஷ்யா பரந்ததும் சிறந்ததுமான அரசாகத் தோற்றம் பெற காரணமான ஆட்சியாளர்

1. அலெக்சாண்டர் 2. மகாபீட்டர் 3. டிரொங்கி 4. வில்லியம்

38. இலங்கைப் பாராளுமன்றத்தில் இருந்த இரு மன்ற முறைமை இரத்துச் செய்யப்பட்ட அரசியல் யாப்பு

1. கி.பி 1948 2. கி.பி.1960 3. கி.பி 1972 4. கி.பி 1978

39. பாப்பரசருடன் "லாத்தரன் உடன்படிக்கை"யைச் செய்து மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொண்டவர்

1. முசோலினி 2. கிட்லர் 3. ஸ்டாலின் 4. வின்சன் சேர்ச்சில்

40. இலங்கையில் முதன் முறையாக கடற்காவல் அரண்களை மகாதித்தவில் அமைத்த மன்னன்

1. 1ஆம் பராக்கிரமபாகு 2. 1ஆம் புவனேகபாகு
3. 1ஆம் அக்போ 4. 1ம் விஜயபாகு

(40 × 2 = 80 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page